**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதிய சம்பள பங்களிப்புத் தொகை ரூபா 47,671 தொகை 26,483 என கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் கடன்கொடுத்தோர் ரூபா 21,188 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உரிமை பொறுப்பேற்கப்பட்டிராத பெறுமதி இனங்காணப்படாத 37 காணித் துண்டுகள் கணக்கீட்டுக் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) எழுதுகருவிகள் கொள்வனவை கணக்கீடு செய்வதற்காக களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமை பின்பற்றப்படாமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 328,357 ஆன எழுதுகருவி இருப்புக்கள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 55,182 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் அம்மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 807,633 ஆக இருந்தமையால் ரூபா 752,451 தொகையான இணக்கமின்மை கண்டறியப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 07 கணக்கு மீதி உருப்படிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 5,544,839 தொகையானதுடன் அதில்

1 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,586,909 ஆக காணப்பட்டது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 18,334,972 ஆக இருந்ததுடன், அதில் 1 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,786,191 ஆக காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நீர் வேலை களஞ்சியப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 342,069 பெறுமதியான நீர் களஞ்சிய இருப்பு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 45,694,091 ஆகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,854,518 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,839,573 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீதவரி

2016 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை வீதவரி மீதி ரூபா 4,620,247 தொகையானதுடன், ஆண்டில் பட்டியலிடல் ரூபா 10,493,588 ஆக இருந்தது. இதில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையே ரூபா 2,411,548 மற்றும் ரூபா 7,946,641 தொகைகள் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன. இது 52 சதவீதம் மற்றும் 75 சதவீதமாக இருந்தன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,755,646 ஆன நிலுவை மீதி காணப்பட்டதுடன், வருமான அறவீடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன. இந்நிலுவை மீதியில் 2017 மே 31 இல் உள்ளவாறு ரூபா 3,737,224 ஆன மீதி மேலும் அறவிட வேண்டியிருந்தது.

#### 2.2.2 ஏனைய வருமானம்

**(அ) தொலைத் தொடர்பு கோபுர வருமானம்**

சபை அதிகாரப்பிரதேசத்தினுள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக 3 வருடங்களுக்குரிய ரூபா 85,800 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏக்கர் வரி**

2016 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 85,750 ஆக இருந்தது. இம்மீதி 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருவதுடன் பிரதேச சபை சட்டத்தின் 158(1)(ஆ) பிரிவின் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் ஏக்கர் வரி பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபை அதிகாரப் பிரதேசத்தினுள் முறையான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு ஏக்கர் வரி அலகுகள் இனங்கண்டு வரியை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,093,460 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 35,003,006 உம் அறவிடப்பட வேண்டியிருந்தன. இந்நிலுவை 2017 யூன் 02 ஆந் திகதியளவில் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 190,000 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 30,395,026 உம் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது மலசலகூடங்களுக்கு இடவசதிகளை வழங்குவது பிரதேச சபையின் செயற்பாடாக இருந்த போதிலும் மெதவல மற்றும் அலதெனிய ஆகிய நகரங்களுக்கான பொது மலசலகூட வசதிகளை வழங்குவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நீர் வசதிகளை வழங்கும் மஹதென்ன நீர் வழங்கல் திட்டத்தில் நீர் வடிகட்டல் மற்றும் சுத்தகரித்தல் இடம்பெறாமல் நீரைப் பெற்றுக்கொள்ளும் கிணற்றுக்கு குளோரின் மாத்திரம் இடப்பட்டு சுகாதார பாதுகாப்பு இல்லாத வகையில் 73 நபர்களுக்கு நீர் வழங்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் மீண்டெழும் வருமானத்திலிருந்து குறைந்தது 30 சதவீதமான நிதிஏற்பாடு அபிவிருத்தி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் மீண்டெழும் வருமானமான ரூபா 63,280,099 ஆலிருந்து ரூபா 4,320,300 அதாவது 7 சதவீதம் அளவிலான குறைந்த சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை உள்ளவாறான எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 7 வெற்றிடங்களும் 9 மிகைகளும் காணப்பட்டன.

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குழாய் கிணறு பதிவேட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக 311 குழாய் கிணறுகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக முறையான கணிப்பீடொன்று மேற்கொண்டு இணங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதாந்தம் ரூபா 500 ஆன கட்டணமொன்று அறவிடலின் பேரில் சபைக்குரிய குழாய் கிணறுகளைப் பயன்படுத்துவதற்கு பிரதேசவாசிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் 311 குழாய் கிணறுகளுக்காக குறைந்தது ரூபா 155,500 ஆன வருமானமொன்று சபைக்கு அறவிடப்பட வேண்டிய போதிலும் ஆண்டில் ரூபா 2,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2012 முதல் 2015 காலப்பகுதியில் 1134 கட்டிட திட்ட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 153 இற்காக மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) ஹேதெனிய நகரில் தற்போது பேணப்பட்டு வரும் பொது மலசலகூடம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் உருக்குலைந்து அழுக்கடைந்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்த போதிலும், இப்பொது மலசலகூடத்திற்காக நீர்வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி ரூபா 24,028 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2017 சனவரி 18 ஆந் திகதி வரையிலும் நீர் இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மெதவவில் அமைந்துள்ள 0.5239 ஹெக்டேயர் அளவிலான விளையாட்டரங்கு 2014 யூலை 15 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 சனவரி 18 ஆந் திகதி வரையிலும் அதில் எவ்வித அபிவிருத்தி வேலைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான குருந்துகஹமட களஞ்சியம் 2017 சனவரி 18 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இக்களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் முறையாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி இனங்காண முடியாத 215 இரும்பு கதிரைகள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டு துரப்பிடித்து உருக்குழைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தன.

(iii) இக்கட்டிடத்தின் ஒரு பகுதியில் வெளித்தரப்பினாரால் 1998 ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் பாலர் பாடசாலையொன்று நடாத்திச்

செல்லப்பட்டு வந்த போதிலும் கட்டண அறவீடொன்றோ அல்லது எவ்வித உடன்படிக்கைகளோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

ரூபா 8,700,000 பெறுமதியான 2 வாகனங்கள், பெறுமதி இனங்காண முடியாத வாகனங்கள் மற்றும் இயந்திர உருப்படிகள் 18 உம் விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

2016 ஆம் ஆண்டிற்காக சபை நிதியத்திலிருந்து செயற்படுத்த நிர்ணயிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி முன்மொழிவுகள் ஆண்டின் ஆரம்பத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்று செயற்படுத்த முடியுமாக இருக்கையில் 22 அபிவிருத்தி திட்டங்களுக்கான அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு ஆண்டின் நடுப் பகுதியில் 3 சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்துவதால் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எதிர்பார்க்கப்பட்ட அளவில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் 3 வருமான விடயங்களில் 25 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலும் 5 செலவின விடயங்களில் 25 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டில் ரூபா 42,195,550 ஆன மூலதனச் செலவினம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டினை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிருவாகம்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்